**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070320236094

Volume: 7

Issue: 3

Month: January

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 05.10.2022

Accepted: 20.11.2022

Published: 01.01.2023

Citation:
Sivakumar, L. "Bhuta Traditions and Religious Traditions." *Shanlax International Journal of Tamil Research*, vol. 7, no. 3, 2023, pp. 105–10.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i3.6094

*Corresponding Author:
lingamparvathithayan@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Buddhist Traditions and Religious Traditions

**Dr. L. Sivakumar**
*Assistant Professor, Tamil Studies, Bishop Heber College*
*Tiruchirappalli, Tamilnadu, India*
*https://orcid.org/0000-0001-8382-2189*

**Abstract**
There are ideas about Bhuta found in Ancient Tamil Literatures. They Fall into Three categories. Among them, natural objects (five elements) are associated with Bhuta Religion, the worship god Sathukka Bhuta is associated with Sramana Religions like Jainism, Bhddhism, and the protective god Bhuta Ganam or collective Bhutas are associated with Saivism. This Article examines these three types of Bhutas in detail.

**Key Words:** Bhuta Religion, Sramana Religions, Jainism, Budhism, Saivism, Bhuta Ganam, Chathukka Bhutam, Five Elements, Folklore Worship, Myth

**References**

1. Saminathaiyer U.V. (ed.). 2011 Ettuth thogaiyul Naangavathagiya Pathitrup Pattu Moolamum Uraiyum, Chennai: Dr. U.Ve.Sa Library.
2. Singaravelu Muthaliyar A. 2002. Abithana Sinthamani, Chennai: Asian Educational Service.
3. Sivakumar, L. 2019. Chilappathigaraththil Varunap Bhutar (article), Panmuga Nookil Chilappathigaram (book), Tiruchirappalli: Bishop Heber College Tamil studies Department.
4. Duraichamy Pillai (Comm.). 2010. Purananuru Moolamum Uraium, Part -2 (201 – 400 Paattugal), Chennai: Poombuhar Pathippagam.
5. Maathaiyan, P. 2022. *Palanthamil Ilakkiyangalil Bhutamum Bhutavathamum* (article), Tamilar Ariviyal Marabu (book), Chenai: Panmaiveli.
6. --------------- Tamil Lexicon, Chennai: Madras University. https://dsal.uchicago.edu/dictionaries/tamil_lex/

# பூத மரபுகளும் சமய மரபுகளும்

*முனைவர் வி. சிவகுமார்*
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

***ஆய்வுச் சுருக்கம்***
*பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் பூதம் பற்றிய கருத்துகள் காணப்படுகின்றன. அவை மூன்று வகைகளுள் அடங்குகின்றனவாக உள்ளன. அவற்றுள் இயற்கைப் பொருட்களான ஐம்பூதம் பூதநெறியோடும் வழிபாட்டுக் கடவுளான சதுக்க பூதம் சிராமண மரபுகளோடும் காக்கும் தன்மையுடைய பூதக் கூட்டம் அல்லது பூத கணம் சிவநெறியோடும் தொடர்புடையதாக இருக்கின்றன. இம்மூவகைப் பூதங்களையும் இக்கட்டுரை விரிவாக ஆராய்கின்றது.*
***திறவுச் சொற்கள்:*** *பூதநெறி, சிராமண சமயங்கள், சைனம், பௌத்தம், சிவ சமயம், பூத கணம், சதுக்க பூதம், ஐம்பூதங்கள், நாட்டுப்புற வழிபாடு, தொன்மம்*

பழந்தமிழ் இலக்கியங்களில் பூதம் பற்றி ஐம்பூதங்கள் பற்றிய மரபு, சதுக்க பூதம் பற்றிய மரபு, பூத கணங்கள் பற்றிய மரபு ஆகியவை காணப்படுகின்றன. இம்மரபுகளைத் தமிழகத்தில் வளர்ச்சிபெற்ற பூத நெறி, சிராமண சமயங்களான பௌத்த சைன நெறிகள், சிவ நெறி ஆகியவைத் தங்கள் சமயத்திற்கு ஏற்ப ஏற்றுக் கொண்டன. இம்மரபு மாற்றத்தை இக்கட்டுரை விரிவாக ஆராய்கின்றது.

## பூதம் - சொல்லும் பொருளும்

பூதம் என்னும் சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் 9 இடங்களில் பயின்று வருகின்றது. அவ்வொன்பதில் ஏழு இடங்களில் பூதம் என்ற சொல் அடையின்றி வருகின்றது. மற்ற இரண்டு இடங்களில் பெரும் பூதம் (புறம். 2:6), வெந்திறற் பூதம் (பதிற். பதிகம் 9:13-14) ஆகிய அடையோடு வருகின்றது. இச்சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் பின்வரும் மூன்று பொருளில் பயின்றுவருகின்றது.

1. நிலம், தீ, நீர், வளி, ஆகாயம் ஆகிய ஐந்து இயற்கைப் பொருள்களையும் பூதம் என்ற சொல் குறிக்கின்றது (புறம். 2:6, பரி. 3:66).
2. நான்கு சந்திகள் கூடும் இடங்களில் வைக்கப்பட்ட சதுக்க பூதம் என்ற காவல் தெய்வத்தை இச்சொல் குறிக்கின்றது (பதிற். பதிகம் 9:13-14).
3. பிணங்கள் இருக்கும் போர்க்களம் அல்லது நன்காட்டில் வாழும் பூதக் கூட்டங்களை (பூத கணங்களை) இச்சொல் குறிக்கின்றது (புறம். 369:16-17, பெரும். 234-35).

பூதம் என்ற சொல் ஐம்பூதம், சதுக்க பூதம், பூத கணம் ஆகியவற்றுள் எப்பொருளைக் குறித்தாலும் அவை பெரிய, வலிமையான அல்லது ஆற்றல் மிகுந்த என்ற பொருளோடு தொடர்புடையனவாக உள்ளது சுட்டத்தக்கது. இம்மூன்று பூத மரபுகளையும் தமிழகத்தில் எழுச்சி பெற்ற சமயங்கள் தங்கள் சமயங்களை வளர்த்தெடுக்கப் பயன்படுத்திக் கொண்டன. ஐம்பூதத்தைப் பூத நெறியும் சதுக்க பூதத்தை, சைன, பௌத்த நெறிகளும் பூத கணங்களைச்

சிவ நெறியும் தங்கள் சமயத்தோடு இணைத்துக் கொண்டன. இம்மூன்று பூத மரபுகளோடு வருணப் பூதர் என்ற மரபு சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றது. இவ்வருண பூதர் மரபு வைதீகத்தோடு இணைந்து வளர்ந்தது குறிப்பிடத்தக்கது.[1]

## ஐம்பூதமும் பூத நெறியும்

பூத நெறி பழந்தமிழ் இலக்கியங்களில் மிகச் சிறப்பாக போற்றும் நெறியாக விளங்குகின்றது. இந்நெறி ஐந்து பூதங்களால் உலகம் தோன்றியது (மணி. 27:264-272) என்பதையும் உலகத்தைப் படைக்க கடவுள் தேவை இல்லை (மணி. 21:103) என்பதையும் வலியுறுத்துகின்றது. மேலும் மறுபிறப்பு, மறு உலகம் முதலிய மீவியல்புக் கோட்பாடு களையும் வினைக் கோட்பாட்டையும் (மணி. 27:275-276) மறுக்கின்றது. பழந்தமிழ் இலக்கியங்களிலும் இச்சிந்தனைகள் காணப்படுகின்றன. புறநானூறு 18, 134, 141, 214 ஆகிய பாடல்கள் சைன, பௌத்த சமயங்கள் முன்வைக்கும் மறுமையையும் வைதீகம் முன்வைக்கும் மறு உலகத்தையும் மறுக்கின்றன. மேலும் பூத நெறியைச் சான்றோர் சென்ற நெறி (புறம். 134:3) என்று போற்றுவதும் சுட்டத்தக்கது. இந்நெறி களப்பிரர் காலத்தில் பெருவளர்ச்சி பெற்றது. சைன, பௌத்த, வைதீக சமயங்கள் முன்வைத்த மீவியல்புக் கோட்பாடுகளுக்கு எதிராக இன்பக் கோட்பாடு, இயல்புக் கோட்பாடு முதலானவற்றை வளர்த்தெடுத்தது குறிப்பிடத்தக்கது.

## சதுக்க பூதமும் சிராமண நெறிகளும்

சதுக்க பூதம் என்பதற்கு நான்கு சந்திகள் கூடும் இடத்தில் வைக்கப்பட்ட பூதம் என்று பொருள். இச்சதுக்க பூதத்தைப் பழந்தமிழ் நாட்டுப்புற மக்கள் வழிபட்டிருக்க வேண்டும். நகரங்கள் வளர்ச்சிபெற்ற பொழுது நகரங்களுக்கு இவ்வழிபாடு இடம்பெயர்ந்தது. இவ்வழிபாடு கழுவுள் ஆட்சிபுரிந்த காமூரில் இருந்ததை அகநானூறு (365:13-14) பதிவுசெய்கின்றது. இப்பூதம் வேங்கையின் கீழ் இருந்தது சுட்டத்தக்கது.

## சதுக்க பூதமும் பெருநகரங்களும்

சதுக்க பூத வழிபாடு காவிரிப்பூம்பட்டினம், மதுரை, உறையூர், கருவூர் முதலிய நகரங்களில் பரவியிருந்தது. கருவூரில் பூத சதுக்க வழிபாடு இருந்ததைக் கருவூர் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார் என்ற புலவரின் பெயர் சுட்டிநிற்கின்றது. இதனை ஆராய்ந்த ஔவை துரைசாமிப் பிள்ளை, பண்டைநாளில் பேரூர்களிலுள்ள பெருஞ்சதுக்கங்களின் பூதங்கட்குக் கோயில் எடுத்து அதற்கு வழிபாடு செய்தல் மரபு. காவிரிப்பூம்பட்டினம், மதுரை, உறையூர் முதலிய நகரங்களில் சதுக்க பூதங்கட்குக் கோயில் இருந்ததாகப் பண்டைநூல்கள் கூறுகின்றன. கருவூரும் பண்டை நாளைப் பெருநகரமாதலின் அந்நகர்க்கண் இருந்த பெருஞ்சதுக்கத்துப் பூதத்தின் பெயர் கொண்ட சான்றோர் ஒருவர் உண்டு. அவரைக் கருவூர் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார் என்பர். இப்பெயர் நானூறாண்டுகட்கு முன்பும் மக்களிடையே வழங்கியிருக்கிற தென்பது கல்வெட்டுகளால் தெரிகிறது (2010:101) என்று குறிப்பிடுகின்றார். இவ்வழிபாடு சேரர்களின் தலைநகரமான வஞ்சியில் இருந்ததைச் சிலப்பதிகாரம் (28:147-148) எடுத்துரைக்கின்றது. இதனைப் பதிற்றுப்பத்து,

> **"அருந்திறன் மரபிற் பெருஞ்சதுக் கமர்ந்த**
> **வெந்திறற் பூதரைத் தந்திவ ணிறீஇ**
> **ஆய்ந்த மரபிற் சாந்தி வேட்டு"**
>
> **(பதிற். பதி. 9:13-15)**

என்று பதிவுசெய்கின்றது. இப்பகுதியில் வரும் சாந்தி வேட்டு என்ற பகுதிக்குப் பழைய உரைகாரர், நூல்களில் ஆராயப்பட்ட இயல்பினையுடைய களவேள்வியாற் சாந்தியைச் செய்து. சாந்தி வேட்டு: "களவேள்வியாற் சாந்திசெய்து விழாவெடுத்தலானே (சிலப்.

உரைபெறு கட்டுரை : அடியார்) (உ.வே. சாமிநாதையர் 2011:280) என்று வைதீக சமய அடிப்படையில் உரைவகுக்கின்றார். சதுக்கபூத வழிபாட்டைச் சைன காப்பியமான சிலப்பதிகாரமும் பௌத்தக் காப்பியமான மணிமேகலையும் இந்திரனோடு இணைத்து விளக்குகின்றன. இம்மரபுகள் சதுக்கபூத வழிபாட்டைத் தொன்ம மரபுகளோடு இணைத்துத் தம் சமயக் கடவுள்களாக மாற்றிவிடுகின்றன.

## சதுக்க பூதமும் தொன்ம மரபுகளும்

சைன, பௌத்த சமயங்களைச் சிராமண சமயங்கள் என்று அழைப்பர். இச்சிராமண சமயங்கள் வேதத்தை அடிப்படையாகக் கொண்ட வைதீக சமயத்திற்கு எதிரானவை. எனவே சிராமண சமயங்களின் தெய்வங்கள் ஒத்த தன்மை வாய்ந்தவையாக விளங்குகின்றன. சிராமண தெய்வங்களிலிருந்து மாறுபட்டதாக வேத ஏற்பு (வைதீக) தெய்வங்கள் அமைகின்றன. சிராமண சமயங்கள் வளர்ச்சிபெற்ற காலத்தில் தமிழ்ச் சமூகத்தில் நாட்டுப்புற தெய்வமாக இருந்த சதுக்க பூதம் சிராமண தெய்வமாக மாற்றப்பட்டது.

அசுரர்களை எதிர்த்து இந்திரனுக்குச் சார்பாகப் போரிட்ட முசுகுந்த சோழனுக்கு ஏற்பட்ட துன்பத்தைப் போக்கிய சதுக்க பூதத்தைப் பற்றிச் சிலப்பதிகாரமும் (5:64-73, 6:7-13) மணிமேகலையும் (1:18-26) பதிவுசெய்கின்றது. இத்தொன்மக் கதையை இந்திர விழாவோடு இணைத்து இவ்விரு காப்பியங்களும் பேசுகின்றன. இக்காப்பியங்கள் குறிப்பிடும் இந்திரனும் இந்திர விழாவும் வேத மறுப்பு மரபோடு தொடர்புடையதாக இருத்தல் வேண்டும். எனவே இந்திரனோடு தொடர்புடைய சதுக்க பூதம் சிராமண தெய்வம் என்பது புலப்படுகின்றது.

தவ வேடத்தில் இருந்து கூடா ஒழுக்கம் செய்வோர், குடும்பப் பெண்களாக இருந்து கொண்டு பரத்தமை ஒழுகும் (விபசாரம் செய்யும்) பெண்டிர், மன்னனுக்குத் துரோகம் செய்யும் அமைச்சன், பிறர் மனைவியை விரும்புபவன், பொய் சாட்சி சொல்வோர், புறம் கூறுபவர் ஆகிய குற்றங்களைச் செய்பவரைச் சதுக்க பூதம் கயிற்றால் கட்டி நிலத்தில் அடித்து உண்ணும் என்று சிலப்பதிகாரம் (5:128-134) குறிப்பிடுகின்றது. அவற்றுள் பொய்ச் சான்று கூறியவனைச் சதுக்க பூதம் புடைத்துத் தின்றதைச் சிலப்பதிகாரமும் (15:76-85) பிற ஆடவர் நெஞ்சு புகுந்த மருதி என்னும் பார்ப்பனப் பெண், தான் கற்புநிலை தாழ்ந்தவள் என்று எண்ணி தன்னைப் புடைத்து உண்ணுமாறு வேண்டியதை மணிமேகலையும் (22:40-79) பதிவு செய்கின்றன. இவ்விரு கதைகளும் சைன, பௌத்தச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் நோக்கில் புனையப் பட்டிருக்கின்றன. இது சதுக்க பூதம் சிராமண சமயத் தெய்வம் என்பதை வெளிப்படுத்துகின்றது.

மணிமேகலை சதுக்க பூதம் காவிரிப்பூம்பட்டினத்தில் பெற்றிருந்த சிறப்பைப் பதிவு செய்கின்றது. காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள உய்யவானம் என்ற மலர்த்தோட்டம் சதுக்க பூதத்தால் பாதுகாக்கப்பட்டதையும் (மணி. 3:47-52) சதுக்க பூதத்தையுடைய வேந்தன் வெல்க என்ற ஒலி பரவியதையும் (மணி.7:77-80) காஞ்சனன் தன் மனைவியைச் சதுக்க பூதம் இருக்கும் பகுதியில் தேடியதையும் (மணி. 20:29) விளக்குகின்றது.

## பூத கணங்களும் சிவ நெறியும்

பூதங்கள் பேய்களோடும் பிணங்களோடும் தொடர்புடையனவாக விளங்குகின்றன. இப்பூதங்கள் கூட்டமாக இருக்கின்றன. இக்கூட்டத்தைப் பூத கணங்கள் என்று அழைப்பர். போரில் வெற்றிபெற்ற பழந்தமிழ் மன்னர்கள் களவேள்வி செய்தனர். இக்கள வேள்வி பற்றிய குறிப்புகளில் பூத கணங்கள் பற்றி விளக்கப்பட்டுள்ளன.

களவேள்வி நிகழ்த்தப்பட்ட களத்தில் பூத கணங்கள் இருந்தன (புறம். 372:10-11). அக்களத்தைக் காத்தன (புறம். 369:17). பூத கணங்கள் தங்கள் சுற்றத்தோடு கையைப் பிடித்துக் கொண்டு துணங்கை என்ற நடனத்தை ஆடின (பெரும்பா. 234-235). இப்பூத கணங்கள் கோயில்களைக் காத்தன (பட். 55). கொல்லிமலையின் மேற்குப் பகுதியில் பூதம் உருவாக்கிய பாவை இருந்தது (நற். 192:8-9). பூத கணங்கள் பற்றிய இந்நம்பிக்கைகள் குறிப்பிட்ட சமயத்தோடு இணைக்கப்படாமல் பழந்தமிழ் இனக்குழுக்கள் சார்ந்து இருந்ததைக் காட்டுகின்றது. களப்பிரர் காலத்தில் எழுச்சி பெற்ற சிவ நெறியோடு இந்நம்பிக்கைகள் இணைந்தன.

சிவன் பூத கணங்களின் தலைவனாகவும் பூதப் படையை வைத்திருந்ததையும் தேவாரப் பாடல்கள் புலப்படுத்துகின்றன. சிவன் பூததாரன், பூதநாதன் என்று அழைக்கப்படுவதையும் பார்வதி பூதநாயகி என்று அழைக்கப்படுவதையும் பெ. மாதையன் (2022:42) எடுத்துக்காட்டுகின்றார். பதினெண் கணங்களுள் ஒன்றாகப் பூத கணங்கள் குறிக்கப்பட்டன (தமிழ் லெக்சிகன் ப. 703). இப்பூத கணங்கள் பதினெட்டு வகையாக இருந்ததும் சுட்டத்தக்கது (ஆ. சிங்காரவேலு முதலியார் 2002:1183)

## தொகுப்புரை

பழந்தமிழ் இலக்கியங்களில் பூதம் பற்றிய மூன்றுவகைப்பட்ட சிந்தனைகள் இருந்தன. அவற்றுள் நிலம், தீ, நீர், வளி, ஆகாயம் ஆகிய ஐந்து இயற்கைப் பொருள்களையும் குறிக்கும் பூதம் பற்றிய சிந்தனைகள் பூத நெறி என்ற தனித்த நெறியாகத் தோன்றி வளர்ச்சிபெற்றது. நான்கு சந்திகள் கூடும் இடங்களில் வைக்கப்பட்ட சதுக்க பூதம் என்ற காவல் தெய்வம் பற்றிய சிந்தனைகள் சிராமண சமயங்களான சைன, பௌத்த சமயங்களோடு இணைந்து வளர்ச்சி பெற்றது. இம்மரபுகள் சதுக்க பூதத்தை இந்திர வழிபாட்டோடு இணைத்தன.

பிணங்கள் இருக்கும் போர்க்களம் அல்லது நன்காட்டில் வாழும் பூதக் கூட்டங்களைக் குறிக்கும் பூத கணங்கள் பற்றிய நம்பிக்கைகள் பழந்தமிழ் இனக்குழுக்கள் சார்ந்து இருந்தன. இப்பூத கணங்கள் பற்றிய சிந்தனைகள் களப்பிரர் காலத்தில் எழுச்சிபெற்ற சிவ நெறியோடு இணைந்து வளர்ச்சி பெற்றன.

## சான்றெண் விளக்கம்

1. சிலப்பதிகாரத்தில் காணப்படும் வருணப் பூதர் மரபை என்னுடைய சிலப்பதிகாரத்தில் வருணப் பூதர் என்ற கட்டுரை விரிவாக விளக்குகின்றது.

## துணைநூல் பட்டியல்

1. சாமிநாதையர் உ.வே. (ப.ஆ.). 2011. *எட்டுத்தொகையுள் நான்காவதாகிய பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும்,* சென்னை: டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம்.
2. சிங்காரவேலு முதலியார் ஆ. 2002. அபிதான சிந்தாமணி, சென்னை: ஏசியன் எஜிகேஷனல் சர்வீஸ்
3. சிவகுமார். லி. (க.ஆ.) 2019. *சிலப்பதிகாரத்தில் வருணப் பூதர் (க.), பன்முக நோக்கில் சிலப்பதிகாரம்* (நூல்), திருச்சிராப்பள்ளி: பிஷப் ஹீபர் கல்லூரித் தமிழாய்வுத்துறை.
4. துரைசாமிப் பிள்ளை ஔவை (உ.ஆ.). 2010. *புறநானூறு, இரண்டாம் பாகம் (201 - 400 பாட்டுகள்), மூலமும் உரையும்,* சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
5. மாதையன் பெ. (க.ஆ.). 2022. *பழந்தமிழ் இலக்கியங்களில் பூதமும் பூதவாதமும் (க.), தமிழர் அறிவியல்*

மரபு (நூல்), சென்னை: பன்மைவெளி

6. -------- தமிழ் லெக்சிகன், (த. லெ.) (சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி), சென்னை : சென்னைப் பல்கலைக்கழகம், https://dsal.uchicago.edu/dictionaries/tamillex/

7. பூதம் என்ற சொல்லின் தோற்றத்தை ஆராய்ந்த, சென்னை சொற்பிறப்பியல் பேரரகர முதலி, பூத்தல் = தோன்றுதல், பூ - பூது - பூதம் = தோன்றியது. ஐம்பூதங்களில் ஒன்று. வளியென வரூஉம் பூதக் கிளவியும் ( தொல். 242) (வ.வ. 240)) (2005:529)

8. இராமையா பு. ஏ. 2005. செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகர முதலி, ஆறாம் மடலம், பாகம் இரண்டு, பி - பூ, சென்னை: செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கம்.